# அழகான பாடலொன்று

அழகான பாடல் ஒன்று அன்பாகப் பாடிக் கொண்டு
அலைபோன்றுன் பாதங்களை நான் தொழுவேன்
நிலையான உந்தன் அன்பில் குலையாது வாழுகின்ற
அருள்தானே வேண்டுமென்று நான் விளைந்தேன் யேசுவே என் யேசுவே (2)

**1**
என்னுள்ளம் மகிழ உன்னை நான் புகழ
எந்நாளும் ஆயிரம் காரணமுண்டு நேரமுமுண்டு
நன்மைகளுண்டு தீமைகளுண்டு
என் தேவை எதுவோ அதுவே என்
கண்ணில் படுவதுமுண்டு
ஒளியை ஏற்றின் இருள் அகலும்
நன்மை செய்தால் தீமை விலகும்
என் வேண்டல் இதுவாகும் உன்
மாண்பும் அதுவாகும்
யேசுவே என் யேசுவே (2)

**2**
நீ தானே செடியாம் நானுன்னில் கிளையாம்
இணைந்தே நாம் வாழ்ந்தே கனி தருவேனே பயன் தருவேனே
உயிராக நீயும் உடலாக நானும்
உறவாக வாழ்ந்தே உயர்வடைவேன் நான் உனில் மகிழ்வேனே
மண்ணில் மடிந்து முளைக்கும் மணி போல்
மன்னன் உன்னில் இறந்து உயிர்ப்பேன்
என் வேண்டல் இதுவாகும் உன் மாண்பும் அதுவாகும்
யேசுவே என் யேசுவே (2)